கலைச்சொல் பேரகராதி

தொகுதி - 14

புவி அறிவியல் துறைகள்

கலைச்சொல்லாக்கக் குழு
தமிழ்நாடு அரசு

கலைச்சொல் பேரகராதி

தொகுதி – 14

கலைச்சொல் பேரகராதி

தொகுதி – 14

புவி அறிவியல் துறைகள்

புவியியல்
சூழலியல்
கானியல்
வானியல்

கலைச்சொல்லாக்கக் குழு
தமிழ்நாடு அரசு

நூல் விவரம்

பதிப்பகம்	: தமிழ் இணையக் கல்விக்கழகம் (தமிழ் இணையப் பல்கலைக்கழகம்) எல்நெட் மென்பொருள் நகர், நான்காம் தளம், தரமணி, சென்னை – 600 113. தொலைபேசி : 9144 22541010, 12
பதிப்பு	: முதற்பதிப்பு கி.பி. 2010 (திருவள்ளுவர் ஆண்டு 2041)
© நூல் முற்றுரிமை	: தமிழ் இணையக் கல்விக்கழகம் (தமிழ் இணையப் பல்கலைக்கழகம்)
நூல் அளவு	: 1/8 டெமி
பக்கங்கள்	: 696 + 38
எழுத்து அளவு	: 11 புள்ளிகள்
தாள்	: 90 GSM மேப்லித்தோ டீலக்ஸ்
கட்டு	: கெட்டிஅட்டையுடன் எந்திரக்கட்டு
வெளியீடு	: தமிழக அரசின் கலைச்சொல்லாக்கக் குழு
அச்சுக்கோப்பு	: தமிழ் இணையக் கல்விக்கழகம் (தமிழ் இணையப் பல்கலைக்கழகம்)
அச்சிட்டோர்	: சென்னை மைக்ரோ பிரிண்டர்ஸ் 130/34, நெல்சன் மாணிக்கம் சாலை, அமைந்தகரை, சென்னை–600 029. தொலைபேசி: 9144 23740099
விலை	: ரூ. 440 /-

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

நாள் : 18–11–2008

அணிந்துரை

அனைத்துத் துறைகளிலும் தமிழ்மொழி வாயிலாக உயர் கல்வி அளிக்கப்படவேண்டும் எனும் நமது அறுதி இலக்கை அடைவதற்கு அறிவியல், பொறியியல், மருத்துவம் முதலான துறைகளில் பாட்நூல்கள் தமிழில் உருவாக்கப்படவேண்டும். அதற்கு முதற்படியாக அனைத்துத் துறைகளுக்கும் தமிழில் கலைச்சொற்கள் உருவாக்கப்படுதல் இன்றியமையாத தேவையாகும். சென்ற நூற்றாண்டுக்கு முன்பே தமிழில் கலைச்சொல்லாக்கப் பணி தொடங்கப்பட்டுள்ளது. துறைவாரியாக, ஆங்காங்கு பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் நூல்நிலையங்களில் இடம் பெறத்தக்க வகையில், அனைத்துத் துறைகளும் அடங்கிய கலைச்சொல் பேரகராதி வரிசை ஒன்று, தரப்படுத்தப்பட்டு வெளியிடப்படவில்லை. இதை உணர்ந்தே தமிழக அரசு கி.பி.2000-ஆவது ஆண்டில் கலைச்சொல்லாக்கக் குழு ஒன்றை நிறுவிப் பொறுப்பளித்தது.

கலைச்சொல்லாக்கக் குழு, இப்பணியைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டின் இது தமிழகப் பல்கலைக்கழகங்களின் கூட்டுப் பணியாக மேற்கொள்ளப்படவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. அதனடிப்படையில் தமிழகத்தின் பதினான்கு பல்கலைக்கழகங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் உரிய துறையை ஒதுக்கி அந்தந்தத் துறைக்குத் தேவையான கலைச்சொற்களை உருவாக்கித்தரும் பொறுப்பு வழங்கப்பட்டது. அதுவரை உருவாக்கப்பட்டுள்ள கலைச்சொற்களை முறையாகச் சேகரிப்பதும், தேவையான அளவில் புதிய சொற்களைப் படைப்பதும் ஒவ்வொரு பல்கலைக்கழகமும் மேற்கொண்ட பணியாகும்.

தமிழகப் பல்கலைக்கழகங்களின் கலைச்சொல்லாக்கக் குழுக்களின் சீரிய உழைப்பினால் உருவாக்கப்பட்ட கலைச்சொற்கள் 2,50,000க்கு மேல் இயன்றவரை தரப்படுத்தப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பதிப்பித்து வெளியிடும் பணியை ஏற்றுக்கொண்ட தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இக்கலைச்சொற்களைச் சீராய்வு செய்து பதினான்கு தொகுதிகளாய் வெளியிடுகின்றது. இது நம் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியளிக்கும் நற்பணியாகும். இம்முயற்சி தமிழ்வழி உயர்கல்விக்கு உறுதியானதோர் படியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தமிழகப் பல்கலைக்கழகங்களின் ஆசிரியப் பெருமக்கள் நூற்றுக்கணக்கானோர் இப்பணியில் ஈடுபட்டுப் பணிபுரிந்துள்ளனர். அவர்கள் அனைவரின் பணியும் பாராட்டிப் போற்றத்தக்கதாகும். இப்பணிகளில் அவர்களை ஈடுபடுத்தி நெறிப்படுத்திய துணைவேந்தர்கள் அனைவரின் பணியும் போற்றுதற்குரியது. அவ்வாறே இச்சொற்களைப் பதிப்பித்து வெளியிட முன்வந்த தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இச்சொற்களைச் சீராய்வு செய்யும் பணியில் ஈடுபடுத்திய நூற்றுக்கும் மேற்பட்ட துறை வல்லுநர்களின் செம்மையான பங்களிப்பும் நயந்து பாராட்டத்தக்க தொண்டு ஆகும். சீராய்வுப் பணிகளை ஒருங்கிணைத்துச் சீர்மையான சொற்களின் உருவாக்கத்திற்கு வழிவகுத்த தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பணியும் சிறப்பான இடம் பெறுகிறது.

இப்பணிகளின் எல்லாக் கட்டங்களிலும் முழுமையான ஈடுபாட்டுடன் தகுந்த நெறிமுறைகளையும் செயல்வழிமுறைகளையும் வகுத்தும்,

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

எனும் குறள் நெறிப்படி துறைவல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து பணிப்பொறுப்பளித்து திட்டத்தின் வெற்றிக்கு அயராது பாடுபட்டு, பேரகராதியின் பதினான்கு தொகுதிகளை நமக்குத் தந்துள்ள

கலைச்சொல்லாக்கக் குழுவும், குழுவின் தலைவர் பேரா. வா.செ. குழந்தைசாமி அவர்களும் ஆற்றியுள்ள நற்பணிகள் முழுமனதுடன் போற்றுதற்குரிய அருஞ்செயல்களாகும்.

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் நம்முன்னேற்றம் என்று தமிழக மக்கள் அனைவரின் சார்பாகவும் இம்முயற்சிகளை வரவேற்று இத்தொகுதிகளைத் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் அளிப்பதுடன் இத்தகைய முன்னேற்றப் படிகள் பலவற்றை நாம் எய்திட இம்முயற்சி ஊக்கமளிப்பதாய் விளங்க எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பணியின் பயனாய் விளைந்த கலைச்சொற்களைப் பயன்படுத்தி நூல்களையும் ஆய்வேடுகளையும் விரிவுரைகளையும் உருவாக்கி அறிவியல் தமிழ்த் துறைகளுக்குச் செழுமை சேர்க்கச் சேரவாரும் செந்தமிழ் நாட்டீர் என்று வருங்காலப் பங்களிப்பாளர்களுக்கும் அன்புடன் அழைப்பு விடுக்க விழைகிறேன்.

(மு. கருணாநிதி)

முன்னுரை

தமிழ் மூவாயிரம் ஆண்டு இலக்கியப் பாரம்பரியம் உள்ள பண்டை மொழி. உலகின் மிகப்பழமை வாய்ந்த நாகரிகங்களில் ஒன்றான திராவிட நாகரிகத்தின் கலை, இலக்கியம், வாழ்வியல் தத்துவம் அனைத்தின் கொள்கலனாக விளங்குவது. தொல்காப்பியம் போன்ற இலக்கணம், சங்க நூல்கள் போன்ற கவிதைத் தொகுப்பு, சிலப்பதிகாரம் போன்ற மக்கள் காப்பியம், வள்ளுவம் போன்ற வாழ்வியல் தத்துவம் என்பன இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்திய காலப்பகுதியில் மனித சமுதாயம் அடைந்திருந்த சிந்தனை வளத்தின் சிறப்புக்கு எடுத்துக்காட்டு. இவை வேளாண்மை நாகரிகத்தில் நாம் அடைந்திருந்த முன்னேற்றம். இது தொடர்ந்தது; வளர்ந்தது.

பதினைந்தாம் நூற்றாண்டில் மேலை நாட்டில் அச்சுப்பொறி உருவாக்கப்பட்டது. எழுதுவது கல்வியறிவைப் பாதுகாக்கிறது. அச்சு அதைப் பரப்ப உதவுகிறது. மேலை நாடுகளில் கல்வியறிவு பரவியது. மறுமலர்ச்சிக் காலம் உதயமாயிற்று. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தொழில்புரட்சி ஏற்பட்டது. மனித சமுதாயம் தொழில் யுகத்தில் அடியெடுத்து வைத்தது. அந்தக்காலம் தொடங்கி, ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் நாம் அந்நியராட்சியின் கீழ் இருந்தோம். நமது மொழி ஆட்சி மொழியாக இருக்கவில்லை. கல்வியறிவு வளர்ச்சியில், அறிவியல், தொழில்நுட்ப முன்னேற்றத்தில் நாம் ஒரு யுகத்தையே இழந்து விட்டோம்.

1947–இல் விடுதலை பெற்றபின், இழந்ததை ஈடுசெய்யும் முயற்சியில் இறங்கினோம். கல்வியறிவில், அறிவியல், தொழில்நுட்ப ஆய்வில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றம், மக்களைச் சென்றடைய வேண்டுமானால், அவை மக்கள் பேசும் மொழியில் இருக்கவேண்டும். இந்தக் குறிக்கோளை மனத்திற் கொண்டு, தமிழைக் கல்வியின் எல்லா மட்டத்திலும் பயிற்று மொழியாக்குவதற்கான செயல்திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறோம் எனினும், இம்முயற்சியில் நாம் நிறைவுதரும் நிலையை எட்டவில்லை.

பரவலாகத் தமிழ் பயிற்று மொழியாக இடம் பெறுவதை ஊக்குவிக்கும், விரைவுபடுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு, நீதிபதி மோகன் தலைமையில் அமைத்த குழு, பயிற்றுமொழி தொடர்பாகக் கீழ்க்காணும் செயல் திட்டங்களைப் பரிந்துரைத்தது.

1. தொழில் கல்வியைத் (Professional Education) தமிழ் வழி கற்பிக்கத் தொடக்கப்பணிகள் பல செய்ய வேண்டியுள்ளன. அவை கலைச்சொல் பட்டியல்கள் தயாரித்தல், பாடநூல் தயாரித்தல், கீழ்நிலையிலிருந்து தமிழ்வழி கற்பித்தலைத் தொடங்குதல் – அதாவது தொழில் கல்வியைத் தமிழ்வழி கற்பிக்கத் தேவையான தொடக்கப்பணிகள் பலவற்றையும் செய்தல்.

2. கலைச்சொல்லாக்கப் பணி என்பது தொடர்ந்து செய்யவேண்டிய நிலையான பணி. தமிழ்நாட்டில் கலைச்சொல் அகராதிகள், களஞ்சியங்கள் ஆகியவை தனிப்பட்டவர்களாலும், பல்கலைக்கழகங்களாலும் ஆங்காங்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் இவை யாவும் தனித்தனி முயற்சிகளாகவே இன்று வரை திகழ்கின்றன. உண்மையான முன்னேற்றம் பெற, கலைச்சொற்களைத் தொகுத்து வெளியிடவும், தொடர்ந்து இப்பணிகளை மேற்கொள்ளவும் ஒரு சட்டத்தின் வாயிலாக உருவாக்கப்பட்ட தன்னாட்சி அமைப்பை (A Statutory Autonomous Body) அரசு உருவாக்க வேண்டும். இவ்வமைப்பிற்குப் பதவி வழிப்பட்ட தலைவராக (Ex-officio President) முதலமைச்சர் இருப்பார். செயல் தலைவராக (Chairman) கல்வித்துறையில் சிறந்த அறிஞர் ஒருவர் நியமிக்கப்படுவார். அனைத்துத் துறைகளுக்கும் அந்தந்தத் துறைச் சார்புடைய நிபுணர்களைத் துணைத் தலைவர்களாகக் கொண்ட துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை தத்தம் துறைசார் பணிகளை மேற்கொள்ளும். இத் துணைத் தலைவர்கள், செயல் தலைவரின் கீழ் ஒருங்கிணைந்து செயல்படுவர்.

இந்தப் பரிந்துரையை ஏற்று, தமிழக அரசு அரசாணை [நிலை] எண் 78, நாள் 10.03.2000 மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்கள் தலைமையில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும், பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி அவர்களைச் செயல் துணைத் தலைவராகவும் ஐந்து பதவி வழி உறுப்பினர்களையும் கொண்ட ஒரு முதல்நிலைக் குழுவை [உயர்மட்டக்குழுவை] அமைத்தது. குழுவின் அமைப்பு, பட்டியல் 1–இல் கொடுக்கப்பட்டுள்ளது.

உயர்மட்டக்குழுவின் முதல் இரண்டு கூட்டங்களில், தொழில் பயிற்சிப் பள்ளி [Industrial Training Institute] பல்தொழில் பயிற்சிக் கல்லூரி [Polytechnic] ஆகியவற்றிற்கான பாடநூல்கள் தயாரித்தல், அதற்கான கால அட்டவணை போன்றவை விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

உயர்மட்டக்குழுவின் மூன்றாவது கூட்டம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் 11.12.2000 – அன்று நடந்தது. தமிழகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கலைச்சொல் தயாரிப்பது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. தமிழில் கலைச்சொல்லாக்கப் பணி பத்தொன்பதாவது நூற்றாண்டிலேயே தொடங்கப்பெற்றிருக்கிறது. ஆங்காங்கு தனியார் முயற்சியில் அமைந்த குழுக்கள், தனி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் இப்பணியில் ஈடுபட்டுக் கலைச்சொல் தொகுப்புகளை வெளியிட்டுள்ளன. ஆனால் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கி, பல தொகுப்புகளைக் கொண்ட கலைச்சொல் பேரகராதி வரிசை ஒன்று உருவாக்கப்படவில்லை. துறைகள் அனைத்தையும் உள்ளடக்கிய கலைச்சொல் பேரகராதி வரிசையை வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. கீழ்க்காணும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

- கலைச்சொல் அகராதி வரிசை அனைத்து அறிவுத் துறைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு துறை அகராதியும் அந்தத் துறை வல்லுநர்களால் இரண்டொரு தமிழ்ப் பேராசிரியர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட வேண்டும்.

- கலைச்சொல் அகராதி அவ்வப்பொழுது புதுப்பிக்கப்பட வேண்டும்.
- கலைச்சொல் அகராதி ஒவ்வொரு துறையிலும் அத்துறையின் உயர்மட்ட அளவில் கல்வி ஆய்வு நடைபெறும் சூழ்நிலையில் தயாரிக்கப்பட வேண்டும்.
- எதிர்காலத்தில் ஒவ்வொரு துறையிலும் கலைச்சொல் தயாரிக்கும் நிறுவனமே கலைக் களஞ்சியம் வெளியிடவும், அந்தத் துறை தொடர்பான தாளிகை (Journal) வெளியிடவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- பொதுவாக, அறிவியல் மற்றும் கல்வியறிவுத் துறைகளைத் தமிழில் உருவாக்கி, அவை மேம்பட உதவும் பணியில் தமிழகத்தின் எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஈடுபட வேண்டும். இது பல்கலைக்கழகங்களின் கூட்டு முயற்சியாக, தொடர் முயற்சியாக இருக்க வேண்டும்.

இந்தப் பின்னணியில் தமிழக அரசு அமைத்துள்ள உயர்மட்டக் குழுவின் செயல் துணைத் தலைவரான பேரா. வா. செ. குழந்தைசாமி அவர்களைத் தலைவராகவும், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட கலைச்சொல்லாக்கக் குழு அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. விவரம் பின்வருமாறு :

1. கலைச்சொல்லாக்கக் குழு ஒன்று (பட்டியல் II) அமைக்கப்படும்.
2. உயர்மட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் பேரா. வா.செ. குழந்தைசாமி, கலைச்சொல்லாக்கக் குழுவின் தலைவராக இருப்பார்.
3. தமிழகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் பதவி வழி [Ex-officio] உறுப்பினர்களாக இருப்பர்.
4. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் செயலர் பதவி வழி [Ex-officio] செயலராகப் பணிபுரிவார்.

5. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் இப்பணி தொடர்பான செலவுக்காக இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

இம்முடிவுகளை உள்ளடக்கி, ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் கலைச்சொல் தயாரிக்க வேண்டிய துறையை (பட்டியல் III) ஒதுக்கி அரசாணை (நிலை) எண் 32. நாள் 05.02.2000 பிறப்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கெனக் கீழ்க்காணும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டன:

1. ஒவ்வொரு பல்கலைக்கழகக் குழுவுக்கும் அதன் துணைவேந்தர் தலைவராக இருப்பார். ஒவ்வொரு குழுவிலும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களோடு, ஆர்வமும் திறமையும் உள்ள துறை வல்லுநர்களும் உறுப்பினர்களாக இடம்பெறுவர். இவர்களில் ஒருவர் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார்.
2. ஒவ்வொரு குழுவிற்கும் அளிக்கப்பட்டுள்ள நிதி, கலைச்சொல் பேரகராதி தயாரிப்பதற்கான கருத்தரங்கம், மற்றும் கருத்துப் பட்டறை நடத்தவும், முறையான பணியில் உள்ள நிபுணர்கள் பகுதி நேரமாக இப்பணியில் ஈடுபடும் போது, அதற்கான மதிப்பூதியம் (Honorarium) வழங்கவும், தட்டச்சு மற்றும் கணினி அச்சுச் செய்தல், இப்பணிக்காகக் கணிப்பொறி வாங்குதல், கணினித்தாள் வாங்குதல் மற்றும் இது தொடர்பான பொருட்கள் வாங்குதல், அஞ்சல் மற்றும் கூரியர் போன்றவற்றிற்கான செலவுகள் ஆகியவற்றிற்காகச் செலவிடப்படலாம்.
3. தமிழ்க் கலைச்சொல் பேரகராதித் திட்டத் தலைவரின் அலுவலகம் சென்னையிலுள்ள தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் அலுவலகத்தில் செயல்படும். அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் ப.அர. நக்கீரன் அவர்கள் தனி அலுவலராகச் செயல்படுவார்.

4. ஒவ்வொரு பல்கலைக்கழகக் குழுவும் செய்ய வேண்டிய பணிகள்:

   i. இதுவரை தொகுக்கப்பட்டுள்ள கலைச்சொல் அகராதிகளைச் சேகரிக்க வேண்டும்.

   ii. அந்தந்தத் துறைகளில் வழங்கப்படும் ஆங்கிலச் சொற்களை A முதல் Z – வரை அகர வரிசைப்படுத்தித் தொகுக்க வேண்டும்.

   iii. ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள தமிழ்க் கலைச்சொற்களை முதலில் திரட்ட வேண்டும்.

   iv. மீதமுள்ள சொற்களுக்குப் புதிய தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்க வேண்டும்.

   v. ஆங்கில – தமிழ்க் கலைச்சொற்களைத் தொகுத்து தரப்படுத்திக் கணினியில் உள்ளீடு செய்து ஒரு வன்நகலையும், ஒரு மென்நகலையும் தயாரித்து தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5. பல்கலைக்கழகக் குழு அனுப்பும் ஒவ்வொரு கலைச்சொல் தொகுப்பும் தமிழ் இணைய தளத்தில் உலகத் தமிழர்களின் பார்வைக்கும் சிந்தனைக்கும் வைக்கப்பட வேண்டும்.

6. தமிழ்க் கலைச்சொல் பற்றி உலகத் தமிழர்களின் கருத்துகளும், அறிவுரைகளும், திருத்தங்களும் பெறப்பட்டு, கலைச்சொற்கள் தரப்படுத்தப்பட வேண்டும். தரப்படுத்திய கலைச்சொல் தொகுப்புகள் நூல்களாக வெளியிடப்படும். புதிய சொற்களை உருவாக்கித் தொகுக்கும் பணியும், தரப்படுத்தும் பணியும் தொடர்ந்து நடைபெறும். இதன் அடுத்த கட்டமாக கலைச்சொல் விளக்க அகராதி தயாரிப்புப் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

7. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் இதற்கென ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கலைச்சொல்லாக்கக் குழுவின் தலைவருக்கு உதவுவதற்காக, அண்ணா பல்கலைக்கழக இயந்திரவியல் பேராசிரியர் ப.அர. நக்கீரன்

நியமிக்கப்பட்டார். அவர் பல்கலைக்கழகங்களுடன் தலைவர் சார்பில் தொடர்பு கொண்டும் சில சமயங்களில் நேரில் சென்றும் இப்பணியை ஆற்றுப்படுத்தினார். ஆண்டு 2001, மே திங்களில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. புதிய ஆட்சியில் உயர்மட்டக்குழு நீடிக்கப்படவில்லை.

கலைச்சொல்லாக்கக் குழுவின் தலைவரான பேரா. வா.செ. குழந்தைசாமி, தமிழக அரசு உருவாக்கிய தமிழ் இணையப் பல்கலைக்கழகச் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இயக்குநர் பேரா. மு. பொன்னவைக்கோ கலைச்சொல்லாக்கத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடையவர். அவர் மேற்பார்வையின் கீழ் பல்கலைக்கழகங்கள் தொகுத்த கலைச்சொற்கள் முழுவதுமாகத் தமிழ் இணையப் பல்கலைக்கழக நூலகத்தின் ஒரு பகுதியாகத் தளத்தில் சேமிக்கப்பட்டன. அவருக்குப் பின் பொறுப்பேற்ற பேரா. வெ. சங்கரநாராயணன், பேரா. ப.அர. நக்கீரன் ஆகியோர் அப்பணியைத் தொடர்ந்தனர். தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்தியவர்கள் தேவைக்கேற்பக் கலைச்சொற்களையும் பயன்படுத்தினர்.

ஆண்டு 2006–இல் மீண்டும் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. இணைய தளத்தில் துறை வாரியாகச் சேகரித்து வைக்கப்பட்டுள்ள கலைச்சொற்களை, அவை சேகரிக்கப்பட்ட குறிக்கோளுக்கேற்பக் கலைச்சொல் பேரகராதி வரிசை வெளியிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளை ஏற்று, தமிழக அரசு, அரசு ஆணை 2 *[D]*, எண் 11, நாள் 01.06.2007 – இல் முதல் தவணையாக ரூ.15 – லட்சம் அனுமதி வழங்கியது.

கலைச்சொல் பேரகராதி வரிசையை வெளியிடும் பணிக்கான ஆயத்தங்களைச் செய்வதற்காகவும், கலைச்சொல் சொற்களை மீள்பார்வை செய்வதற்காகவும், பதிப்புப் பணியை மேற்கொள்வதில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு உதவுவதற்காகவும், அண்ணா பல்கலைக்கழகப் பணி நிறைவுப் பேராசிரியர் அ. இளங்கோவன் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார். கலைச்சொல் பேரகராதி தயாரிப்புப் பணியின் தமிழ் இணையப் பல்கலைக்கழகக் குழு பட்டியல் IV–இல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் கலைச்சொல் பேரகராதி தயாரிப்பில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொண்டது:

1. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் துறை வாரியாகத் தயாரித்த கலைச்சொற்களைக் கணினியில் அச்சிட்டுத் தளத்தில் சேர்த்தல்.

2. தனிக்குழுவோ, வேறு தனி நிறுவனமோ தயாரித்த கலைச்சொற்கள் சேர்க்கப்படாமல் இருந்தால் அவற்றையும் தளத்திலிடல்.

3. இணைய வாசகர்கள் கருத்தென எதுவும் பதிவு செய்யப்பட்டால் அதையும் கருத்திற் கொள்ளுதல்.

4. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் அதற்கு வரையறுக்கப்பட்ட துறையில் கலைச்சொற்கள் தயாரித்த குழுவினரை வரவழைத்து, அக்குழு அனுப்பிய பட்டியல் மற்றும் அத்துறையில் சேர்க்கப்பட்ட சொற்கள் ஆகியவற்றை ஆய்ந்து, சீர்மை, பொருத்தம் ஆகிய கூறுபாடுகளில் இடர்ப்பாடுகள் இருப்பின் அவற்றைச் சரிசெய்து பட்டியலைத் தரப்படுத்துதல்.

5. அச்சிடுவதற்கான தலைப்புகளை வரைப்படுத்தித் தொகுதிகளாகப் பிரித்தல்.

6. தொகுதியின் பரிமாணம் முதல் கட்டமைப்பு வரை பதிப்பித்தற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

பேரா. அ. இளங்கோவன், பேரா. ப. அர. நக்கீரன் ஆகியோர் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் அப்பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த துறையின் கலைச்சொல் ஆக்கப்பணி புரிந்தவர்களை அழைத்து, தொகுப்பின் நிறை குறைகளை விவாதித்தனர். தேவைப்படும் இடங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழக அரசின் உயர்நிலைக்குழு அமைத்த கலைச்சொல்லாக்கக் குழு தயாரித்த கலைச்சொற்கள் பதினான்கு தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன. (பட்டியல் V)

ஒவ்வொரு துறைசார்ந்த தொகுதியிலும் அத்துறைக்குப் பொறுப்பேற்ற பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், ஒருங்கிணைப்பாளர், பல்கலைக்கழகத்தின் துறை அறிஞர்கள், மற்றும் இத்திட்டத்தில் பங்கு பெற்ற பிற அறிஞர்கள் பற்றிய முழு விவரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

முன்பே கூறியது போல, தமிழில் கலைச்சொல்லாக்கப் பணி 19–ஆவது நூற்றாண்டிலேயே துவங்கப்பெற்றது. இருபதாவது நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் பரவலாக இம்முயற்சி இடம் பெற்றது. தனியார் சிலரும், தனியார் சிலர் அமைத்த குழுக்களும், நிறுவனங்களும், அரசுத்துறைகளும், பல்கலைக்கழகங்களும் சற்றுக் குறிப்பிடத்தக்க அளவில் கலைச்சொல் தொகுப்புப் பணியைச் செய்திருக்கின்றன. ஆனால் இதுவரை எல்லாத் துறைகளும் அடங்கியதாகவும் பல தொகுதிகளைக் கொண்டதாகவும், நூல் நிலையங்களில் இடம்பெறத்தக்கதுமான கலைச்சொல் அகராதி வரிசை ஒன்று தயாரிக்கப்படவில்லை. இப்பொழுது வெளியிடப்படும் 14 தொகுதிகள் கொண்ட வரிசை முதல் முயற்சியாகும். ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அதற்கு ஒதுக்கப்பட்ட துறையில், முன்னர் உருவாக்கப்பட்ட கலைச்சொற்களையும் மனத்திற்கொண்டு தேவைக்கேற்பப் புதிய சொற்களை உருவாக்கித் தனது பணியை முடித்திருக்கிறது. எனவே இத்தொகுப்புகளில் பெயர் குறிப்பிடப்படாத எண்ணற்ற அறிஞர்களின் பங்களிப்பு இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பதிவு செய்யவேண்டும்.

கலைச்சொல்லாக்கப் பணி ஒரு நீண்ட பயணம். கல்வியுலகில் உருவாக்கப்பட்டுள்ள சொற்கள் எண்ணற்றவை. ஆயிரக்கணக்கில் புதிய சொற்கள் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலை நாட்டினர் இரண்டு நூற்றாண்டுகட்கு மேல், அவர்கள் சமுதாயத்தில் இடம்பெற்ற காண்டல் [Invention], புனைதல் [Innovation], கண்டுபிடிப்பு [Discovery] போன்றவற்றிற்கு அவர்களுடைய மொழிகளில் அவ்வப்பொழுது பெயரிட்டனர். இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட பாரம்பரியம் உள்ள கிரேக்க மொழியையும், இலத்தீன் மொழியையும் இம்முயற்சியில் தாராளமாகப் பயன்படுத்திக்கொண்டனர். புதிய சொற்கள் ஆக்குவதை எளிமைப்படுத்தும் வகையில் பல முன்னொட்டுகள்

[prefix], பின்னொட்டுகள் [suffixes] மற்றும் பலவகையான உத்திகள் [techniques] உருவாக்கப்பட்டுள்ளன. நாம் நீண்டகாலத் தேக்கத்தைச் சரிசெய்ய வேண்டிய கட்டாயத்தை ஏற்க வேண்டியவர்களாகவும், இன்றைய முன்னேற்றத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

இந்த மகத்தான பணியில் இக்கலைச்சொல் பேரகராதி வரிசை ஒரு முதல் முயற்சி; எளிய பங்களிப்பு. இதை அடித்தளமாகக் கொண்டு மேலும் பல தளங்கள் அமைக்கப்பட வேண்டும். இவை நம்மை எதிர்நோக்கும் பணிகள்.

வா.செ. குழந்தைசாமி
தலைவர்
கலைச்சொல்லாக்கக் குழு

பட்டியல்–I

தமிழ் வழிக் கல்வி உயர்மட்டக் குழு

தலைவர்:

மாண்புமிகு தமிழக முதல்வர்

துணைத் தலைவர்:

மாண்புமிகு கல்வி அமைச்சர்

செயல் துணைத் தலைவர்:

பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி

உறுப்பினர்கள்:

1. துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்
2. துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்
3. பேராசிரியர் க.ப. அறவாணன், துணைவேந்தர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
4. செயலர், உயர்கல்வித் துறை
5. இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி (உறுப்பினர் மற்றும் செயலர்)

பட்டியல்–II
கலைச்சொல்லாக்கக் குழு

தலைவர்:
பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி

செயல் துணைத் தலைவர்: உயர்மட்டக் குழு, தமிழகஅரசு

உறுப்பினர்கள்:
கீழ்க்காணும் பல்கலைக்கழகங்களின்
துணைவேந்தர்கள்: பதவி வழி [Ex officio] பொறுப்பு

1. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
2. அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழகம், கோவை
3. அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
4. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
5. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை
6. தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை
7. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை
8. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை
9. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
10. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி
11. பாரதியார் பல்கலைக்கழகம், கோவை
12. பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
13. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
14. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
15. தகவல் தொழில்நுட்பத் துறை பணிக்குழு: தமிழக அரசு

பட்டியல்–III

கலைச்சொல்லாக்கப் பணி பல்கலைக்கழகங்கள் பொறுப்பேற்றுள்ள துறைகள்:

1. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை	: பொறியியல், தொழில்நுட்பவியல்
2. அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழகம், கோவை	: மனையியல்
3. அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி	: வங்கியியல்
4. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை	: கணக்கியல்
5. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை	: வேளாண்மையியல்
6. தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை	: கால்நடையியல்
7. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை	: மருத்துவவியல்
8. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை	: சட்டவியல்
9. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	: இலக்கியம், மொழியியல்
10. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி	: இயற்பியல்
11. பாரதியார் பல்கலைக்கழகம், கோவை	: வேதியியல்
12. பெரியார் பல்கலைக்கழகம், சேலம்	: புவியியல்
13. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை	: உயிரியல்
14. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி	:சமூகவியல், பொருளாதாரம்
15. தகவல் தொழில்நுட்பத்துறை பணிக்குழு, தமிழக அரசு	: கணினி, தகவல் தொழில்நுட்பவியல்

பட்டியல்–IV

கலைச்சொல்லாக்கம்
தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பணி தளத்திலிடல்: ஒருங்கிணைப்பு: தரப்படுத்தம் பதிப்பித்தல்

தலைவர்
பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி

இயக்குநர்கள்

பேராசிரியர் மு. பொன்னவைக்கோ
பேராசிரியர் வெ. சங்கர நாராயணன்
பேராசிரியர் ப.அர. நக்கீரன்

ஒருங்கிணைப்பு : பதிப்பு

பேராசிரியர் அ. இளங்கோவன்
பேராசிரியர் ப.அர. நக்கீரன்

பட்டியல் – V
கலைச்சொல் பேரகராதி தொகுதிகளும் துறைகளும்

தொகுதி 1. கணிதவியல், புள்ளியியல், இயற்பியல், வேதியியல்

தொகுதி 2. உயிரியல், கால்நடைவளம், மீன்வளம்

தொகுதி 3. பொறியியல், தொழில்நுட்பம் – பகுதி I

தொகுதி 4. பொறியியல், தொழில்நுட்பம் – பகுதி II

தொகுதி 5. பொறியியல், தொழில்நுட்பம் – பகுதி III

தொகுதி 6. பொறியியல், தொழில்நுட்பம் – பகுதி IV

தொகுதி 7. வேளாண்மையியல்

தொகுதி 8. மனையியல் – பகுதி I

தொகுதி 9. மனையியல் – பகுதி II

தொகுதி 10. சட்டவியல்

தொகுதி 11. மருத்துவவியல், உளவியல்

தொகுதி 12. வாழ்வியல் துறைகள்: வரலாறு, பொருளியல், சமூகவியல், மானிடவியல், மொழியியல், கல்வெட்டியல், நாட்டுப்புறவியல், அரசியல், மெய்யியல்

தொகுதி 13. வணிகவியல், வங்கியியல், மேலாண்மையியல்

தொகுதி 14. புவி அறிவியல் துறைகள்: புவியியல், சூழலியல், கானியல், வானியல்

பொதுப் பதிப்புரை

அறிவியல், தொழில்நுட்பத்துறைகளில் உயர்கல்வியையும், அன்றாட ஆராய்ச்சி, வளர்ச்சி, மேம்பாடு குறித்த தகவல்களையும் தமிழ்வழிப் பரவலாய் அளிப்பதற்குத் தேவையான கூறுகளில் முதன்மையானது வளமான கலைச்சொல் பேரகராதி. கடந்த ஒரு நூற்றாண்டுக் கால அளவில் சிறுகச் சிறுகத் திரண்ட கலைச்சொற்கள் பல்வேறு நிறுவனங்களின் தனித்தனி முயற்சிகளால் சிறுசிறு தொகுதிகளாக வெளியிடப்பட்டு வந்துள்ளன. நூல்களையும் கட்டுரைகளையும் எழுதுவோர்க்கும் அறிவியல் உரைகள் நிகழ்த்துவோர்க்கும் இவை பயன்மிக்கனவாய் அமைந்து உதவின. பயன்பாட்டின்போது இத்தகைய சொற்களை ஒருமுகப்படுத்தலும், செப்பம் செய்து உரிய பொருள்தரும் வகையில் கூர்மையாக்கலும் தேவை என்பது உணரப்பட்டது. நிறுவனப் பொறுப்பில் இப்பணியை மேற்கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் சில துறைகளில் ஓரளவு எண்ணிக்கையில் கலைச்சொற்கள் கொண்ட சிறுதொகுதிகளை வெளியிட்டது. இப்பணியைத் தக்க அளவில் விரைந்து நிறைவேற்றுதற்குத் தமிழகப் பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் ஈடுபடுத்தி ஒருங்கிணைக்கும் நோக்கில் தமிழக அரசு கி.பி. 2000 ஆம் ஆண்டில் உருவாக்கிய திட்டத்தின் விளைவாய் பதினான்கு பல்கலைக்கழகங்களின் கலைச்சொல்லாக்கக் குழுக்கள் மூன்றாண்டு காலம் பணியாற்றி ஏறத்தாழ 2,50,000 கலைச்சொற்களைத் திரட்டித் தந்துள்ளன. இவற்றைத் தொகுத்துச் செம்மைப்படுத்திப் பதிப்பித்து வெளியிடும் பொறுப்பைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் உருவாக்கித்தந்துள்ள கலைச்சொல் தொகுதிகளை ஒப்புநோக்கி இறுதி வடிவம் அளிக்கத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் முற்பட்டபோது கலைச்சொல்லாக்கம் குறித்த அடிப்படைக் கருத்துக்களின் நோக்கில் சீராய்வு தேவையென்று முடிவு செய்யப்பட்டது. சீராய்வுப் பணியரங்குகளில் கலைச்சொற்களை உருவாக்கிய பல்கலைக்கழகத்தின் சார்பாளர்களுடன், அதே துறைகளில் பிற பல்கலைக்கழகங்களிலும் நிறுவனங்களிலும் இருந்து வல்லுநர்களையும் அழைத்து விரிவான

கலந்தாய்வு நடத்தி முடிவு செய்யலாம் எனத் திட்டமிடப்பட்டது. சீராய்வில் பின்வரும் கலைச்சொல்லாக்க நெறிமுறைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

- ஆங்கிலக் கலைச்சொற்களில் பல படைப்பாளர்களின் பெயரில் அமைந்தவை. Volt, Newton போன்ற இத்தகைய சொற்களைத் தமிழில் எழுத்துப் பெயர்ப்பு மட்டும் செய்து (வோல்ட்டு, நியூட்டன்) பயன்படுத்தலாம்.
- பரவலாகப் புழங்கிவரும் குளோரின், புளோரின், சோடியம் போன்ற பொருட்களின் பெயர்களும், ரேடார், லேசர் போன்ற சுருக்கங்களும் அவ்வாறே பயன்படுத்தப்படலாம்.
- Tele– , Micro– , Mono– போன்ற முன்னொட்டுகளையும், –Sphere, –Logy போன்ற பின்னொட்டுகளையும் பல்வேறு சொற்களுடன் இணைத்துப் புதிய கலைச்சொற்களை உருவாக்கும்போது அவை எல்லாச் சொற்களிலும் சீராக அமையுமாறு முன்னொட்டுகளுக்கும், பின்னொட்டுகளுக்குமான, தமிழ்ச்சொற்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- பெரும்பாலான கலைச்சொற்கள் எல்லாத்துறைகளிலும் ஒரே பொருளுடன் பயன்படுத்தப்படுவன. ஆனால் சில சொற்கள் வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. எனவே இந்நுட்பமான வேறுபாடுகள் புலப்படுமாறு கலைச்சொற்கள் அந்தந்தத் துறைகளில் புழங்கிவரும் சரியான பொருளைத் தரும் வகையில் பொருட்செறிவும் கூர்மையும் கொண்டு விளங்கவேண்டும்.
- கலைச்சொற்கள் அவை உணர்த்தும் கருத்தைச் செறிவாகச் சுட்டி, சுருக்கமாய் அமைதலே நடைமுறைப் பயன்பாட்டுக்கு உகந்ததாகும். நீண்ட விளக்கங்களாய் அமைக்கப்பட்ட கலைச்சொற்கள் ஏற்றவாறு சுருக்கமான சொற்களாய் மாற்றியமைக்கப்படவேண்டும். எ.கா. "Acid test" என்பதற்குக் கலைச்சொல்லாக "தங்கத்தை திராவகம் தாங்க சோதனை" என்று தரப்படும் தொடர் நீண்ட விளக்கமாய் அமைந்து பயன்பாட்டுக்கு ஏற்ற எளிமையின்றி

அமைவதுடன் பொருளையும் குறுக்கி விடுவதால் அதனைத் தவிர்த்து, "அமிலச் சோதனை" என்பதையே கலைச்சொல்லாக ஏற்றுக்கொள்ளப்படலாம். விரிவான தகவல்கள் விளக்க அகராதியிலோ பாட நூலிலோ இடம் பெறலாமேயன்றிக் கலைச்சொல்லில் தவிர்க்கப்பட வேண்டும்.

- கலைச்சொல் உருவாக்கத்தில் நல்ல தமிழ்ச்சொற்கள் இலக்கியங்களிலிருந்தும், மக்களின் நடைமுறைப் பயன்பாட்டிலிருந்தும் தேடிக் கொணர்தலில் பெருமுயற்சி மேற்கொள்ளப்படவேண்டும்; எனினும் தவிர்க்க இயலாத நிலைகளில் அயல்மொழிச் சொற்களையும் பயன்படுத்தி எளிய கலைச்சொற்களை உருவாக்கலாம்.

இத்தகைய கோட்பாடுகள் பணியரங்குகளில் விவாதிக்கப்பட்டு அதனடிப்படையில் சீராய்வு மேற்கொள்ளப்பட்டு பொருள்களுக்கு இறுதி வடிவம் கொடுத்தலே பணியரங்குகளின் நடைமுறை நெறியாய் கடைப்பிடிக்கப்பட்டது.

கலைச்சொல் பேரகராதியின் பதிப்புப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் பொறுப்புகளுக்காக அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டடப் பொறியியல் துறை பணி நிறைவுப் பேராசிரியர் அ. இளங்கோவன் மூதறிவுரைஞராக நியமிக்கப்பட்டார். கலைச்சொற்கள் அனைத்தும் பதினான்கு தொகுதிகளாக வெளியிடப்படுதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. தொகுதிகளின் துறைகள் குறித்த விவரங்கள் பின் அட்டையில் தரப்பட்டுள்ளன.

நடைமுறைப் பயன்பாட்டின் தேவை கருதிச் சில ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்க் கலைச்சொற்கள் தரப்படலாம் எனக் குழு முடிவு செய்தது. பயன்பாட்டை நூல்/கட்டுரை எழுதும் படைப்பாளிகளுக்கே விட்டுவிடலாம் என்று குழு கருதினாலும், கொடுக்கப்படும் சொற்களில் முதலில் இடம்பெறும் சொல்லே குழுவின் கருத்தில் விழுமியது என்பதைப் பயனாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். சில சொற்களுக்கு ஆங்கிலக் கலைச்சொற்களையே தமிழ் எழுத்துப் பெயர்ப்பு மட்டும் செய்து பயன்படுத்துதல் பரவலான பயன்பாட்டில் இருப்பினும், பாடுபட்டு உருவாக்கப்பட்ட தமிழ் கலைச்சொற்கள், அழிந்து மறையாமல்

காப்பதன் பொருட்டு, இரண்டாவது, மூன்றாவது சொற்களாக இத்தொகுப்பில் தரப்பட்டுள்ளன. பயன்பாட்டுப் புழக்கத்தில் தேறிவரும் சொற்களே இறுதியில் நிலைப்பாடு பெறும் என்பதை நாம் அனைவரும் உணர்வோம்.

நூற்றுக்கணக்கான துறைவல்லுநர்களின் ஈடுபாட்டில் உருவான இத்தொகுப்பை மேலும் செழுமைப்படுத்தி வளமுடையதாக்கும் பணி இனி இந்நூலின் பயனாளர்களுக்கே உரியது. தமது கருத்துக்கோவைகளை உருவாக்குவதில் இக்கலைச்சொற்கள் எந்த அளவுக்குத் துணை செய்கின்றன என்பதையும், தங்கள் பயன்பாட்டுக்குத் தேவையான பிற விழுமங்களையும் பயனாளர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவித்தல், தொகுப்பின் செழுமைப்பாட்டுக்கு மிக உதவும் என நம்புகிறோம்.

பேரா. ப.அர. நக்கீரன்
பேரா. அ. இளங்கோவன்
பதிப்பாசிரியர்கள்

பதினான்காம் தொகுதிக்கான பதிப்புரை

கலைச்சொல் பேரகராதியின் நிறைவுப் பகுதியான பதினான்காம் தொகுதியில் புவிஅறிவியல் துறைகளான புவியியல், சூழலியல், கானியல், வானியல் ஆகிய துறைகளைச் சார்ந்த ஏறத்தாழ 18,800 கலைச்சொற்கள் இடம்பெறுகின்றன. தமிழக அரசின் கலைச்சொல் குழு பதினான்கு பல்கலைக்கழகங்களுக்கும் துறைகளை வெளியிட்ட போது விடுபட்ட துறைகளில் சூழலியல், கானியல், வானியல் ஆகிய துறைகளும் அடங்கும். பணியின் நிறைவு வேண்டி இத்துறைகளையும் சேர்க்க தமிழ் இணையக் கல்விக்கழகம் முயற்சி மேற்கொண்டது.

2007–ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்ட சுற்றுச்சூழல் களஞ்சிய அகராதிக்காகத் திரட்டப்பட்ட 5,000 கலைச்சொற்களை இத்தொகுப்பில் சேர்க்க அனுமதியளித்த அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும், களஞ்சிய அகராதித் திட்ட இயக்குநரும், கட்டமைப்புப் பொறியியல் பேராசிரியரும் களஞ்சிய அகராதிக்குழு கூட்டுநருமாய் விளங்கிய முனைவர் ஜெ.ம. சாமுவேல்நைட் அவர்களுக்கும் ஒருங்கிணைப்பாளரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் விளங்கிய பேரா. சா. கிருட்டிணமூர்த்தி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அன்றியும் களஞ்சிய அகராதியின் உருவாக்கத்தில் கட்டுரையாளர்களும், வல்லுநர்களுமாக 80க்கும் மேற்பட்டோரின் உழைப்பினால் தான் இக்கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டோ, திரட்டப்பட்டோ கிடைக்கப்பெற்றுள்ளன. ஆதலின் அவர்களது பணிக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கானியல், வானியல் ஆகிய துறைகளுக்கான கலைச் சொற்களைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் சார்பில் திரட்ட முடிவு செய்யப்பட்டது. கானியல் துறையில் 3,460 கலைச்சொற்களையும், வானியல் துறையில் 3,000 கலைச்சொற்களையும் உருவாக்கியும் திரட்டியும் தொகுத்தளித்த அறிவுரைஞர் உலோ. செந்தமிழ்க்கோதை அவர்களுக்கு தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புவியியல் துறையில் பெரியார் பல்கலைக்கழகம் ஏறத்தாழ 2,000 கலைச்சொற்களைத் திரட்டித் தந்துள்ளது. இப்பணியை மேற்கொண்ட பெரியார் பல்கலைக்கழக வல்லுநர்கள் நமது போற்றுதலுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். இத்தொகுப்பு நிறைவு பெறாமல் பல பகுதிகள் விடுபட்ட நிலையில், அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் தொழில்நுட்பக் கலைச்சொல் திரட்டிலிருந்தும், பிற வெளியீடுகளிலிருந்தும் பதிப்பாசிரியர் அ. இளங்கோவன் அவர்கள் திரட்டிய சொற்களுடன் புவியியல் துறையில் 7,300 கலைச்சொற்கள் இடம்பெறுகின்றன.

இப்பதினான்கு தொகுதிகளும் பெரும்பாலான இன்றியமையாத் துறைகளுக்கான கலைச்சொற்களைக் கொண்டு அனைத்துக் கல்வித் துறைகளுக்குமான தேவைகளை நிறைவு செய்யும் என்று நம்புகிறோம். ஆனால் துறைகள் ஒவ்வொன்றும் தொடர்ந்து விரைவான வளர்ச்சியடைந்து வருகின்றன. எனவே தேவைப்படும் புதிய கலைச்சொற்களை உருவாக்கவும் இத்தொகுதிகளில் உள்ள கலைச்சொற்கள் அடித்தளமாய் அமைந்து உதவும் என்பதுடன் இத்தொகுதிகளைப் பயன்படுத்துவோர்க்குப் புதிய சொல்லாக்கத் திறன்களை வளர்க்கவும் இத்தொகுதிகள் உதவியாய் அமையும் என்றும் நம்பலாம்.

இக்கலைச்சொற்களைப் பதிப்பித்து வெளியிடும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட தமிழ் இணையக் கல்விக்கழகம் மேற்கொண்ட சீராய்வுப் பணியின் போது பல்வேறு இயல்களுக்கான தொகுதிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் வெவ்வேறு இயல்களில் இடம்பெறும் பொதுவான சொற்கள், முரண்பட்ட, சிக்கலான சொற்களால் கலைச்சொற்களாய் கருத இயலாத பொதுவான சொற்கள் முதலியவை நீக்கப்பெற்றன. சொற்களின் பொருட்கூர்மை கருதிப் பலசொற்கள் செம்மையாகத் திருத்தப்பட்டும் விரிவான விளக்கங்களாய் அமைந்த பதிவுகள் பல தேவையான அளவில் சுருக்கப்பட்டும் மாற்று வடிவம் தரப்பட்டும் எளிமையாக்கப்பட்டன.

நடைமுறைப் பயன்பாட்டின் தேவை கருதிச் சில ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்க் கலைச்சொற்கள் தரப்படலாம் எனக் குழு முடிவு செய்தது. பயன்பாட்டை நூல்/கட்டுரை எழுதும் படைப்பாளிகளுக்கே விட்டுவிடலாம் என்று குழு கருதினாலும், கொடுக்கப்படும் சொற்களில் முதலில் இடம்பெறும் சொல்லே குழுவின் கருத்தில் விழுமியது என்பதைப் பயனாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். சில சொற்களுக்கு ஆங்கிலக்

கலைச்சொற்களையே தமிழ் எழுத்துப் பெயர்ப்பு மட்டும் செய்து பயன்படுத்துதல் பரவலான பயன்பாட்டில் இருப்பினும், பாடுபட்டு உருவாக்கப்பட்ட தமிழ்க் கலைச்சொற்கள், அழிந்து மறையாமல் காப்பதன் பொருட்டு, இரண்டாவது, மூன்றாவது சொற்களாக இத்தொகுப்பில் தரப்பட்டுள்ளன. பயன்பாட்டுப் புழக்கத்தில் தேறிவரும் சொற்களே இறுதியில் நிலைப்பாடு பெறும் என்பதை நாம் அனைவரும் உணர்வோம்.

மேலும் பதிப்புத் தொடர்பான அச்சுக்கோப்பு, மெய்ப்புத் திருத்தம், பக்க அமைவு போன்ற பல்வேறு பணிகளில் தமிழ் இணையக் கல்விக்கழகப் பணியாளர்கள் பலரும் ஈடுபாடு காட்டி உழைப்பை நல்கியுள்ளனர். கலைச்சொல் பேரகராதியின் பதிப்புப் பணிகளுக்காக முழுநேரக் கலைச்சொல் உதவியாளராய் திருமதி ம.வடிவழகி கபிலன் பணியாற்றி வருகிறார். அன்றியும் இப்பணிகளில் நேரடியாகப் பங்கு பெற்ற தமிழ் இணையக் கல்விக்கழகப் பணியாளர்களில் அறிவுரைஞர் அ.ஜேம்ஸ், தரவு உள்ளீட்டாளர்கள் திரு ரா.கிரீஷ், திரு கோ.சா. நா. பாவாடை, கணினி வழி வெளியீட்டாளர் திரு ச.மகேஷ், மென்பொருள் பொறியாளர் திரு கொ.ச.கணியன், இயக்குநரின் தனிச்செயலர் செல்வி ச.மலர்விழி, தட்டச்சர்கள் திருமதி பா.கெமிலாதேவி, திருமதி சோ.ஜோதி, திருமதி செ.உ. சுஜிதா உள்ளிட்ட பணியாளர்கள் அனைவரின் நல்லுழைப்பும் நமது நன்றிக்கு உரியது.

அச்சுத் தரம், அச்சுப்பொருட்களின் தரம் ஆகியவற்றை வரையறுத்து விலைப்புள்ளிகளை ஆய்ந்து அச்சீடு தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்கான குழுவில் பணியாற்றிய மேனாள் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருமான பேரா.ம.இராசேந்திரன், அண்ணா பல்கலைக்கழக அச்சுத் தொழில்நுட்பத் துறைத் தலைவர் பேரா.நா.இராஜேசுவரி ஆகியோர் பணியும் போற்றற்குரியது. நூலைச் செம்மையாக அச்சிட்டு நல்கும் பொறுப்பையேற்று நிறைவேற்றிய சென்னை மைக்ரோ பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் பணியையும் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

பேரா. ப.அர. நக்கீரன்
பேரா. அ. இளங்கோவன்
பதிப்பாசிரியர்கள்

சீராய்வுப் பணிகளில் பங்குபெற்ற வல்லுநர்கள்

1. முனைவர் இரா. இராமசாமி
   அறிவுரைஞர்
   கடல் பொறியியல் துறை
   இந்தியத் தொழில்நுட்பக்கழகம்
   சென்னை – 600 036

2. முனைவர் இரா. அசோக்குமார்
   நில இயற்பியலார்
   நிலத்தடி நீர்க்கோட்டம்
   (பொதுப்பணித் துறை)
   தரமணி
   சென்னை – 600 113

3. பேரா. உலோ. செந்தமிழ்க்கோதை
   பணி நிறைவுச் செயற்பொறியாளர்
   தமிழ்நாடு மின்சாரவாரியம்
   மேனாள் முதன்மைப் பதிப்பாசிரியர்
   அறிவியல் களஞ்சியம்
   தமிழ்ப் பல்கலைக்கழகம் – தஞ்சாவூர்

4. பேரா. ப. அர. நக்கீரன், இயக்குநர்
   தமிழ் இணையக் கல்விக்கழகம்
   சென்னை – 600 113

5. பேரா. அ. இளங்கோவன், பதிப்பாசிரியர்
   தமிழ் இணையக் கல்விக்கழகம்
   சென்னை – 600 113

புவியியலுக்கான முன்னுரை

பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் அறிவியல் துறைகளில் புவி அறிவியல் (புவியியல்) துறை முதன்மை இடம்பெறத்தக்கதோர் துறையாகும். புவி வளங்களைத் தேடிப் பயன்படுத்தும் பணிகளில் புவி அறிவியல் கல்வியும் ஆய்வுகளும் இன்றியமையாதவை. அவ்வாறே, புவியின் பேரிடர்களான நிலநடுக்கம், ஆழிப்பேரலை, நிலச்சரிவு போன்றவைகளை அறிந்து புரிந்துகொண்டு அவ்விடர்களின்போது சிறும பாதிப்புடன் உய்வதற்கான வழிகளை ஆய்வதிலும் புவி அறிவியல் துறை மிகப்பெரிய பங்காற்றுகிறது. இதோடு மட்டுமல்லாமல் நீர்வளம், கனிம வளம் போன்றவற்றை கண்டறிவதில் இத்துறை சிறப்பாக பங்காற்றுகிறது. புவியில் படிந்து கிடக்கும் தொல்லுயிர் எச்சங்கள் மற்றும் படிவங்களை ஆய்வு செய்வதன் மூலம் புவியின் தோற்றம் மற்றும் வளர்ச்சிகளை இத்துறை வல்லுநர்கள் கண்டறிகின்றனர். இத்தகையச் சூழ்நிலையில் புவி அறிவியல் தொடர்பான நூல்கள் தமிழில் மிகவும் அரிதாகவே உள்ளது. எனவே புவி அறிவியல் துறையில் உயர்கல்வியும் ஆய்வுகளும் விரிவாக மேற்கொள்ளப்படுகின்ற தேவையை உணரலாம். இத்துறைக்கான நூல் தமிழில் உருவாகி பல்கிப் பெருக வேண்டும். அதற்கான அடிப்படைத் தேவையாகக் கலைச்சொற்களை உருவாக்கும் பணியைக் கருதலாம்.

தமிழக அரசு 2000–ஆம் ஆண்டில் உயர்கல்வியில் தமிழ்மொழியின் பயன்பாட்டிற்கான செயலாக்கங்களில் முதற்பணியாகக் கலைச்சொல் பேரகராதி தயாரிக்கும் திட்டத்தை உருவாக்கி, தமிழகத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்களையும் இப்பணியில் ஈடுபடுத்த முடிவு செய்தது. இத்திட்டத்தின் கீழ் புவி அறிவியல் துறை கலைச்சொற்களை உருவாக்கும் பணியை பெரியார் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கி, ரூபாய் 2,00,000/– நிதி ஒதுக்கீடும் செய்தது.

பெரியார் பல்கலைக்கழகம், துணைவேந்தர் தலைமையில் கலைச்சொல்லாக்கக் குழு ஒன்றை அமைத்து இப்பணியில் ஈடுபட்டது. ஏறத்தாழ இரண்டாண்டு காலப் பணிக்குப் பின்னர், 2,365 கலைச்சொற்கள் கொண்ட தொகுதியொன்றை உருவாக்கித் தந்தது, இத்தொகுப்பின் பிற்பகுதியில் விடுபட்டிருந்த பல சொற்களைச் சேர்த்துத் தமிழ் இணையக் கல்விக்கழகம் (தமிழ்

இணையப் பல்கலைக்கழகம்) நிறைவாக்கியுள்ளது கண்டு மகிழ்வதோடு இப்பணியை மேற்கொண்ட பெரியார் பல்கலைக்கழக வல்லுநர்களின் பணியும் நன்றியோடு நினைவு கூரத்தக்கது.

இக்கலைச்சொல் தொகுதியைப் பயன்படுத்திக் கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றை எழுதுவோரும், பாடங்கள் நடத்துவோரும் இதன் சொற்களின் எண்ணிக்கையையும், பொருள்செறிவையும் மேம்படுத்துவதன்வழிப் புவி அறிவியலை எல்லா மட்டத்திலும் தமிழில் கற்பிக்க ஏற்றவாறு செழிப்படையச் செய்வார்களென்று நம்புகிறேன். பயனீட்டாளர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கி. முத்துச்செழியன்
துணைவேந்தர்
பெரியார் பல்கலைக்கழகம்

பயன்பாட்டுக் குறிப்புகள்

1. துறைவாரியான ஆங்கிலக் கலைச்சொற்களின் அகர வரிசைப்படி கலைச்சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன.
2. பயன்பாட்டு அடிப்படையில் சில சொற்கள் பல்வேறு துறைகளில் அமைந்துள்ளன. எனவே பொதுவான இச்சொற்கள் குறிப்பிட்ட துறையில் இடம்பெற்றிடாதிருப்பின் தொடர்பான பிற துறைகளில் அவற்றை (அகர வரிசையில்) காணலாம்.
3. ஒரு (ஆங்கிலச்) சொல் வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு பொருள்களில் பயன்படுத்தப்பட்டிருப்பின் அவை வெவ்வேறு கலைச்சொற்களாகவே கருதப்படும்.

   எ.கா. bridge (civ) - பாலம்
   bridge (elec) - சமனி

4. ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்ச்சொற்கள் வழக்கில் இருப்பின் அவற்றில் கருத்துக்கு நெருக்கமான சில சொற்கள் மட்டும் தரப்பட்டுள்ளன. அவற்றில் எதனைப் பயன்படுத்துவது என்பது பயனாளர் விருப்பமெனினும் முதலில் தரப்படுவதே, விழுமியது என்பது பதிப்புக்குழுவின் கருத்து.
5. சில தனிமங்களின் பெயர்களுக்கு அப்படியே ஒலிபெயர்ப்புகளும் இணையான தமிழ்ச்சொற்களும் தரப்பட்டிருக்கின்றன.

   எ.கா. Hydrogen - ஹைட்ரஜன், நீரகம்

6. ஒரே வடிவ ஆங்கிலச்சொல் சொல்லிலக்கணப்படி வேறுபட்டிருக்குமெனில் அவை சொல்லிலக்கணக் குறிப்புடன் வெவ்வேறு சொற்களாகவே தரப்பட்டுள்ளன.

   எ.கா. balance (n) - சமனிலை
   balance (v) - சமனாக்கு

சொல்லிலக்கணக் குறிப்புகள்:

adj - adjective
adv - adverb
n - noun
v - verb

புவியியல்

A

a	- கனிமக்கூறுகள் நகரும் திசை
A axis	- **A** அச்சு, குறுக்கு அச்சுக்கோணம்
Aa	- கரட்டு அனற்பாறை
Aa channel	- எரிமலைக்குழம்புக் கால்வாய்
Aa lava	- எரிமலைக்குழம்பு, அனற்குழம்பு
Abandoned mines	- கைவிடப்பட்ட சுரங்கங்கள்
Abatement	- தணிதல், தணித்தல் (சுற்றுச்சூழல் மாசு குறைத்தல்)
Abbe refractometer	- அபே (கனிம) ஒளிவிலகல் அளவி
Ablation	- அரிமானத் தேய்வு
Ablation area/zone	- பனியாற்றரிப்புப் பகுதி/ மண்டலம்
Ablation cone	- அரிப்புப் பனிக்கூம்பு
Ablation meander core	- பனியாற்று வளைவு உள்ளீடு
Ablation moraine	- பனியாற்றரிப்புப் பாறைச்சிதிலம்
Ablation till	- பனியாற்றரிப்பு மென்படிவு
Abney hand level	- அப்னே மட்டம் (அளவி)
Abnormal fold	- இயல்பிகந்த மடிப்பு
Aboral	- வாய்க்கு எதிரில்
Aborigine	- பழங்குடிகள்
Abraham's tree	- ஆப்ரஹாம் முகிலமைவு
Abrasion	- சிராய்த்தல், தேய்த்தல், அரித்தல்
Abrasive minerals	- சிராய்ப்புக் கனிமங்கள்
Abrasive sand	- தேய்ப்பு மணல்
Abrasive wheels	- தேய்ப்பு உருளைகள், சாணை உருளைகள்
Abrasives	- தேய்ப்புப் பொருட்கள்

Absarokite - அமிலபசால்ட் பாறைவகை
Absolute - முழுமையான, கலப்பற்ற
Absolute age - (பூமியின்) மெய்வயது
Absolute humidity - தனிநிலை ஈரப்பதம்
Absolute instability - முழுநிலைப்பின்மை
Absolute temperature - செல்சியஸ் வெப்பநிலை, தனிவெப்பநிலை
Absolute time - முழுநிலைக் காலஅளவு, தனிக் காலஅளவு
Absolute velocity - தனி வேகம்
Absolute zero - தனிச்சுழி வெப்பநிலை, ஆற்றலறு வெப்பநிலை
Absorption - உறிஞ்சுதல்
Abstraction - நீர் இறைத்தல் (சேந்தல்)
Abutment - முட்டுச்சுவர்
Abysomed structure - பேராழக் கட்டமைப்பு
Abyssal - ஆழ்கடல், பேராழ
Abyssal floor - ஆழ்கடலடித் தளம்
Abyssal hill - ஆழ்கடலடி நீள்குன்று
Abyssal plain - ஆழ்கடலடிச் சமவெளி
Abyssal zone - ஆழ்கடல் மண்டலம், பேராழ மண்டலம்
Acadian orogeny - அப்பலேச்சியன் மலையாக்க நிகழ்வு (டெவோனியன் காலம்)
Acasta gneiss - பழம் மாக்கல் பாறை
Acceleration - முடுக்கம்
Accelerometer - முடுக்கஅளவி
Accessibility isopleth - சம அணுக்கவரை
Accessory minerals - துணைக் கனிமங்கள்
Accident block - எரிமலை தெறி பாறைச்சில்லு
Accidental inclusions - நேர்ச்சிவழி சேர்கனிமங்கள்
Accordant - சமஉயரஞ்சார்
Accordion fold - துருத்திவகை மடிப்பு

Accretion hypotheses - அகந்திரள்வுக் கருதுகோள்
Achondrite - விண்கல் (பரல்குருவற்ற)
Aciculate (adj) - ஊசிவடிவ (க்கனிமங்கள்)
Acid baths - அமிலத் தொட்டிகள்
Acid igneous rock - அமில அனற்பாறை
Acid rain fall - அமில மழைப்பொழிவு
Acid rock - அமிலப் பாறை
Acidic - அமில, சிலிகான்மிகு (அனற்குழம்புப் பாறைகள்)
A climate - அமைதிமண்டல மழைக் காலநிலை
Acmite - பைராக்சின் வகைக் கனிமம்
Actinometer - ஞாயிற்று ஆற்றல் செறிவுமானி
Active margin - செயல் விளிம்பு
Active volcano - எழுச்சி எரிமலை
Actonian - ஆக்டினியன் கால(நிலை)
Actual evapotranspiration - இயல் நீராவிப்போக்கு
Adamantine - (பட்டைதீட்டிய) வைர ஒளி
Adamellite - ஆடமலைட் பாறை (குவார்ட்ஸ் மிகு கிரானைட்)
Adaptation - ஏற்புத்தன்மை, தகவமைவு
Adaptive radiation - சூழ்நிலைக்கேற்ற விரிவாக்கம்
Adductor impressions - அடக்டார் தடயங்கள்
Adhesion - ஒட்டுந்தன்மை
Adiabatic - வெப்பமாறா
Adiabatic chart - வெப்பமாறாமை அட்டவணை
Adiabatic laps rate - வெப்பநிலை வீழ்ச்சி வீதம் (வெப்பமாறா)
Adiabatic process - வெப்பமாறா நிகழ்வு
Adit - இடைச் சுரங்க வாயில்
Adjacent sea - அண்டைக் கடல்
Adjacent streams - அண்டை ஓடைகள்

Adsorption - பரப்பீர்ப்பு
Adularia - அடுலேரியா (ஃபெல்ஸ்பார் கனிமவகை)
Advance - கடற்கரையியக்கம்
Advastea - வியாழனின் துணைக்கோள்
Advection fog - மூடுபனி
Aegirine - ஏஜிரின் (பைராக்சின் கனிமவகை)
Aeolian abrasion - காற்றுவீச்சுத் தேய்ப்பு
Aeolian placers - காற்றுக் கொழிவுப்படிவுகள்
Aeolian processes - காற்றின் வீச்சுசார் நிகழ்வுகள்
Aeolian sediment - காற்றுவழிப் படிவு
Aeolianite - எயோலினைட் (காற்றால் நிகழும் படிவுகள்)
Aerial photograph - வான்வெளிப் புகைப்படம்
Aero survey map - வான்வெளி அளக்கை நிலப்படம்
Aerobe - உயிர்வளிவாழ் உயிரினம்
Aerolites - விண்வீழ்கல்
Aerological diagram - வளிமண்டல விளக்கப்படம்
Aerosol - புழுதி
Aetosauria - ஏடோசாரியா (டிரியாசிக் கால டைனோசர் வகை)
Af climate - மிதவெப்பமண்டல ஈரக்காலநிலை
After shock - (நிலஅதிர்வின்) பின்தோன்றும் குறு நிலஅதிர்வு
Agate - வச்சிரக்கல், மணிவகை
Age group - வயதுப் பிரிவு
Age pyramid - வயதுவிவர பட்டைக்கூம்பு
Age specific death rate - வயதுசார் இறப்புவீதம்
Age structure - வயதுக் கட்டமைப்பு
Agent - காரணி

Agents of weathering - வானிலைச் சிதர்வு ஊக்கிகள்
Agglomerate - எரிமலைக் கலவைக்கல், குவியல்
Aggradation - அழுந்தமுறாப் படிவுகள்
Aggregate - கூட்டுத்தொகுதி
Agnatha - தாடையில்லாதன
Agonic lines - சுழிக்காந்த இறக்கக் கோடுகள்
Agricultural density - வேளாண் விளைச்சலடர்த்தி
Agricultural limestone and lime - வேளாண் சுண்ணக்கல்லும் சுண்ணகமும்
Agriculture - வேளாண்மை
Aiguille - ஊசிப்பாறை
Air aloft - மேல்நிலைக் காற்று
Air currents - காற்றோட்டங்கள்
Air gun - காற்றழுத்தப்பீச்சி
Air mass - காற்றுத்திரள்
Air pollution - காற்று மாசடைதல்
Air pressure - காற்றழுத்தம்
Air temperature - காற்றின் வெப்பநிலை
Aircraft industry - விமானத் தொழிலகம்
Alabaster - பளிங்கு
Albedo - எதிரொளிர்வு விகிதம், (புவியின்) கதிர்த்திருப்பும் விகிதம்
Albian (adj) - ஆல்பிய (கிரிடேசியஸ் காலப்படிவு)
Albite twin - ஆல்பைட் இரட்டைப் படிகவகை
Albite-epidote-amphibolite facies - ஆல்பைட்-எப்பிடோட்-ஆம்பிபோலைட் உருமாற்றப் பாறைத் தொகுதிகள்
Albitization - ஆல்பைட் கனிமமாதல்

Aleution low - அலூசியன் குறைவழுத்தம் (வட பசிபிக் மாக்கடல் குறைவழுத்தம்)
Algae - கடற்பாசிகள்
Algebraic sum - இயற்கணிதக் கூட்டல்
Alid scale - நீரளவைமானி, ஆலிடு அளவுகோல்
Alkali - காரம்
Alkali basalt - காரவகைப் பசால்ட்
Alkali granite - காரவகை கிரானைட்
Alkali igneous rocks - கார அனற்பாறைகள்
Alkali lakes - காரத்தன்மை ஏரிகள்
Alkali peridotite - காரவகைப் பெரிடோடைட்
Alkali syneite - கார சயனைட்
Alkaline - காரத்தன்மையுள்ள
Alkaline rock - காரப்பாறை, சுண்ணப்பாறை
Alkaline storage batteries - காரத் தேக்கமின்கலங்கள்
Alkalinity - காரத்தன்மை
Allanite - அல்லனைட் (கனிமம்)
Allases - பனியாற்றுப் பள்ளம்
Alligator - கடல் முதலை
Allimetric frequency - முகடு (சிகர) எண்ணிக்கை
Allochem - சுண்ணப்பாறை உட்கூறுகள்
Allochthon - இடமாறிய பாறைகள், அயற்பாறைகள்
Allochthonous (adj) - இடமாறிய, அயல்வகையான
Allopatric speciation - மாற்றுருச் சிறப்பினமாதல்
Allophane - அல்லோஃபேன், களிமண் வகை
Allotriomorphic - நுண்பரலான
Allotriomorphic texture - நுண்பரல் கட்டுக்கோப்பு (நயம்)
Alloy - உலோகக்கலவை

Alluvial diamond - வண்டல்படிவு வைரம்
Alluvial fan - வண்டல் விரிதுறை
Alluvial placer deposits - வண்டற்கனிமக் கொழிவுப்படிவு
Alluvium - வண்டல்படிவு
Alpine orogeny - ஆல்பைன் மலைத்தோற்றம்
Alternating axis - மாற்று அச்சு
Altiplanation - பொருக்கு குறைதல், சமதளமாதல்
Altitude - உயரம்
Alto cumulus - உயர் திரள்முகில்
Alto stratus - உயர் படலமுகில்
Alum - படிகாரம்
Alum minerals - படிகாரக் கனிமங்கள்
Alumina refractory - அனல்தாங்கும் அலுமினியம்
Alunite bleaching clay - அலுனைட் வெளிர்களிமண்
Am climate - அமைதிமண்டலப் பருவமழைக் காலநிலை
Amber - அம்பர் பிசின்
Ambulacrum - எக்கினோ முட்தோல் உயிரின உறுப்பு
Amethyst - ஊதாவண்ண சிக்கிமுக்கி கல்
Ammonoidea - வளைதசைப் புழுக்கள் (மெல்லுடலி வகை)
Amoeboid fold - குறித்த வடிவற்ற மடிப்பு
Amorphous - தூள்ம, படிக உருவமற்ற
Amosite - அமோசைட் கல்நார்
Amphi symmetry - இருநிலைச் சமச்சீர்மை
Amphibian - நிலம்நீர் வாழி, இருவாழி
Amphiboles - காந்தக்கனிம வகைகள்
Amphibolite - காந்தக்கனிமப் பாறை
Amphibolite facies - உருமாற்றப் பாறைத்தொகுதி
Amplitude - வீச்சு

Amygdaloidal structure - வாதுமை வடிவமைப்பு
Amygdule - வாதுமையுரு அயற்படிவுக் குழிவு
Anabatic (adj) - மாறுவெப்பநிலைசார், மேலெழும்
Anabatic wind - மேலெழு காற்று
Anaglyph - அனகிலிஃப் (நிலப் பொருக்கு இருவண்ணப்படம்)
Analcite basalt - அனால்சைட் பசால்ட்
Analcitisation - அனால்சைட் உருவாக்கம்
Analycite syenite - அனால்சைட் சயனைட்
Analyser - ஆய்வி, பகுப்பாய்வி
Analysis of igneous rocks - அனற்பாறைப் பகுப்பாய்வு
Anamorphism - ஆழடுக்கு உருமாற்றம்
Anastomosing channel - கிளைபிரி பின்னல்
Anatexis - உயரனல் உருமாற்றம் (நயமாற்றம்)
Anatomay of houses - வீடுகளின் கூறுகள்
Anchi-eutectic rocks - வேதிமாற்றமுறவியலாப் பாறைகள்
Ancient formations - தொல் பாறையமைப்புகள்
Ancient mantle (or) waste - தொல் சிதிலப் பாறைமூட்டங்கள்
Ancient platform - தொன்னிலச் சமவெளி
Ancient river - தொல் ஆறு
Ancient topography - தொல் நிலஅமைப்பு
Ancient volcano - தொல் எரிமலை
Andesite - ஆண்டசைட் பாறை
Andesite line - (பசிபிக் கடல்படுகை) எரிமலைவளப் பகுதிக்கோடு
Anemograph - காற்றுவிசைப் பதிவி
Anemometer - காற்றுவேகமானி
Aneroid barometer - அனிராய்டு காற்றழுத்தமானி

Angle of depression - இறக்கக் கோணங்கள்
Angle of elevation - ஏற்றக் கோணங்கள்
Angular momentum - கோண உந்தம்
Angular rock fragment - கூரிய பாறைத்துண்டங்கள்
Angular unconformity - (பாறைகளிடைக்) கோண ஒன்றாமை
Angular velocity - கோணத் திசைவேகம் (விரைவு)
Anhedral (Euhedral) - குறைபடிக (முழுப்படிக)
Anhydrite - நீரிலி
Anion - எதிர்மின்னணு, எதிரயனி
Anisotropism - சீரற்ற அணுவமைப்பு, சமச்சீரின்மை
Annual moisture index - ஆண்டு ஈரப்பதச் சுட்டு
Annual temperature ring - ஆண்டு வெப்பநிலை விரவல் வலயம்
Annular drainage pattern - வலய வடிகால் உருவமைப்பு
Annular ring - வலய வரை
Anode - நேர்மின்முனை
Anomaly - பிறழ்வு, ஒவ்வாமை
Anorthosite - அனார்த்தோசைட் பாறை
Antarctic air mass - அன்டார்க்டிக்கா காற்றுத்திரள்
Antarctic circle - அன்டார்க்டிக் வட்டம்
Antecedent drainage - முந்தைய வடிகால்
Anthracite - அனல்மிகு நிலக்கரி
Anthropology - மானிடவியல்
Anthropometry - மனித அளவைமுறை
Antibiotic - நுண்ணுயிரிக்கொல்லி (முறி)
Antichlinal valley - குவிவுப் பள்ளத்தாக்கு
Anticlinal fold - குவிவுப் பாறைமடிப்பு
Anticline - குவி, மேல்வளை
Anti-conosive - கரிமானத்தைத் தடுக்கும்

Anticorrosion - கரிப்புத் தடுத்தல்
Anticyclone - எதிர்ச் சூறாவளி
Antimonial lead - கருஉப்புத் தனிம ஈயம்
Antipodes - எதிரெதிர் முகடுகள்
Antitrade - எதிர்த் தடக்காற்று
Apartheid - இனஒதுக்கல்
Apex - உச்சி
Aphanitic (adj) - நுண்படிக இழைவுநய
Aphelion - சூரியச் சேய்மை
Aphorlith - நுரைமக் கற்குழம்பு
Aplite - அப்லைட்டு (இடையாழ கிரானைட்டு பாறை)
Apogee - புவி அண்மை
Apparent dip - தோற்றச் சாய்வு
Applied geography - பயன்முறைப் புவிப்பரப்பியல்
Aquamarine - கடல்வண்ணக் கல் (நீர்ப்பச்சை), இந்திர நீலக்கல்
Aqueduct - கால்வாய்ப் பாலம்
Aquiclude - நீர்ச்சிறை
Aquifer - நீரகம்
Aquifuge - நீர்ப்பொசியாப் படுகை
Aragonite - அரகோனைட் (வெள்ளைச் சாம்பல்நிறத் தாது)
Arboreal - மரங்களில் வாழ்கின்ற
Arborescant - மரம்போன்ற தோற்றமுடைய
Arc of the meridian - வானநெடுவரை வில்
Archaeological map - தொல்பொருளியல் நிலப்படம்
Archaic - தொன்மையான
Archean - தொல்லுயிர்க்காலம்
Archeological - தொல்பொருளியல்சார்
Arctic air mass - ஆர்க்டிக் காற்றுத்திரள்
Arctic circle - ஆர்க்டிக் வட்டாரம்

Arctic front - ஆர்க்டிக் காற்றோட்டமுகப்பு
Arctic frontal zone - ஆர்க்டிக் காற்றோட்ட முகப்புப் பகுதி
Arctic kindred - ஆர்க்டிக் வகை
Arctrench gap - கடலடிமடுக்களில் எரிமலை வளைய இடைவெளி, கடலகழி வில்வலயம்
Arcuate delta - வில்வளைவு வடிபடுகை
Areal extent - நிலப்பரப்பு
Areal graph - பரப்பளவுக் கோட்டுப்படம்
Arenaceons rock - மணற் பாறை
Arete - கத்திமுனைக் குன்று
Argillaceous - களிமண்மிகு (படிவு)
Argillaceous rock - களிமண் பாறை
Argillisation - களிமண்ணாக்கம்
Aridity - வறட்சி
Aridity index - வறட்சிச் சுட்டு
Arithmatic density - மக்களடர்த்தி
Arithmatic progression - கூட்டல் வரிசை
Armouring - கல், வேதிப்(படுகையின்) பரல் படிவுக்கவசம்
Arroyo - ப-வடிவ நீரோடை
Artefacts - தொல் கைவினைப் பொருட்கள்
Artesian - ஆர்டீசியன் நீரூற்று
Artesian basins - பொங்குஊற்று வடிநிலம்
Artesian conditions - பொங்குஊற்று நிலைமைகள்
Artesian well - பொங்குஊற்று
Arthropoda - கணுக்காலிகள், இணைப்புடலிகள்
Artificial brines - செயற்கைக் கடல்நீர்
Artificial recharge - செயற்கை நீரூட்டல்
As - படிகரை

Asbestine - கல்நார் இயல்புடைய
Asbestos - கல்நார்
Ascending spring - மேலெழும் ஊற்று, பொங்கும் ஊற்று
Aseismic plates - நிலஅதிர்ச்சி அருகிய தட்டுக்கள்
Ash fall tuft - எரிமலைச்சாம்பல் குவை
Ash flood - சாம்பல் வழிதல்
Asperity - முறி இடைமுகப் பரப்பு
Asphalt - நிலக்கீல்
As-plane - படிகரைத் தளம்
Assimilation - தன்மயப்படுதல், ஒருமயமாதல்
Assortation of sediments - வகைப்படுத்தப் படிவுகள்
Asteroid - குறுங்கோள், சிறுகோள்
Asthenosphere - புவிமென்பாறைக் கோளம்
Astrobleme - தொல் எரிமலை வாய்
Astrogeology - கோள் நிலவமைப்பியல்
Astronomical map - வான்பொருள் இருப்பு வரைபடம்
Astronomy - வானியல்
Astrophic balance - அஸ்டராபிக் சமநிலை
Astrophysics - வானியற்பியல்
Asymetric fold - சமச்சீரற்ற மடிப்பு
Atlas - நிலப்படத்தொகுதி
Atmosphere - வளிமண்டலம்
Atmospheric gases - வளிமண்டல வளிமங்கள்
Atoll - வட்டப் பவளத்திட்டு
Atomic energy - அணு ஆற்றல்
Atomic reactor - அணு உலை
Atomic welding - அணுவிசைப் பற்றுவைப்பு
Atomsphere - வளிமண்டலம்
Atomspheric pressure - வளிமண்டல அழுத்தம்

Attrition - உரசல் தேய்வு, மோதித் தேய்தல்
Augen structure - கண்போன்ற வடிவமைப்பு
Augite - ஆகைட்
Augitite - ஆகிடைட்
Aurede - உட்போந்த அனற்பாறைப் புறணி
Auriferous deposits - தங்கப் படிவங்கள்
Aurora - புவிமுனைச் சுடரொளி
Automorphic - தன் உருப்படிம அமைப்பு
Auvulson - மறைந்து தோன்றும் நீரோடை
Avalanche - பனிப்பாறைப் பெயர்ச்சி
Average - சராசரி, நிரல்
Aw climate - அமைதிமண்டல ஈரவறட்சிக் காலநிலை
Axial plane - அச்சுத் தளம்
Axial plane faces - முதன்மை அச்சுத்தள முகங்கள்
Axial ratio - அச்சு விகிதம்
Axis - அச்சு
Axis of a fold - பாறைமடிப்பு அச்சு
Axis of symmetry - சமச்சீர்மை அச்சு
Azimuth - வானுச்சி, திசைக்கோணம்
Azimuthal - ஒத்ததிசை
Azoic zone - உயிரிலி வளையம்

B

B climate - வறண்ட காலநிலை
Back radiation - திரும்பு கதிர்வீச்சு
Background radiation - பின்னணிக் கதிர்வீச்சு
Backward bearing - பின்நோக்கு திசையளவு
Bacterial process - நொதிக்கவைத்தல், நுண்ணுயிரி வினை

Bad conductors of heat - வெப்பஅரிதில் கடத்திகள்
Bad lands - கரடுமுரடான நிலங்கள்
Bald - வளமற்ற
Baldheaded anticline - வளமழிந்த குவிவு
Ball - சிறு மணல்முகடு, உருளை மணற்படிவு
Ball and socket joint - பந்து கிண்ணமூட்டு
Ball clay - நற் களிமண்
Balm - குழிந்த செங்குத்துப்பாறை
Band - வண்ண மென்பாறையடுக்கு
Band graph - பட்டை தொடுப்புப்படம்
Banded structure - பட்டைக் கட்டமைப்பு
Bank - கடல் மணல்திட்டு, கரை
Bank of river - ஆற்றங்கரை
Bank storage - கரைத் தேக்கம்
Bar - பாறைமதில்
Bar diagram - பட்டைப்படம்
Barbed drainage - அம்பு வடிகால்
Barkhan - பிறை எக்கர், பிறைவடிவ மணற்திட்டு
Barogram - அழுத்தப் பதிவுப்படம்
Barograph - அழுத்தப்பதிவி
Barometer - பாரமானி, அழுத்த அளவி
Barrage (reservoir) - நீர்த்தேக்கம்
Barrier reef - கடல்அரண் பவளப்பாறை
Barrow - மண்திட்டு, குன்று
Barter - பண்டமாற்று முறை
Barysphere - அடர்புவிக் கரு
Basal pinacoid - அடி இணைவடிவப் பக்கம்
Basalt - பசால்ட்
Basanite - பேசனைட்
Base flow - அடிப்பாய்வு

Base level - அடிமட்டம்
Base level of erosion - அரிப்புத் தடை மட்டம்
Base line - இணைவரைத் துண்டு
Base map - அடிப்படை நிலப்படம்
Base metal - மூல உலோகம்
Basic igneous rocks - அடிப்படை அனற்பாறைகள்
Basic inventory - அடிப்படைக் குறிப்பு
Basin - தாழ்நிலம், வடிநிலம்
Basin method of recharge - வடிநில நீரூட்டு முறை
Batholith - பேராழக் கிரானைட் பாறைகள்
Bauxite bleaching clay - பாக்சைட் வெளிர்களிமண்
Bauxite deposits - பாக்சைட் படிவுகள்
Bay - விரிகுடா
Beach - கடற்கரை
Beach placer formation - கடற்கரை கொழிவுப்படிவு உருவாக்கம்
Bearings - திசை அளவு
Bearings of landmarks - நிலக்குறித் திசைக்கூறுகள்
Beaufort scale - பியூஃபோர்ட் அளவுகோல்
Beaufort wind scale - பியூஃபோர்ட் காற்று அளவுகோல்
Becke line - பெக்கி கோடு
Bed - படுகை
Bed rock - படுகைப் பாறை
Bedded vein - பாறையடுக்கு விரிசல், பாறை நுண்ணிழைவு
Bedding - அடுக்கமைவு
Bedding, concordant - ஒத்த அடுக்குப் படுகைகள்
